*செய்தி வெளியீடு எண்:08* *நாள்: 06.11.2019.*

**தேனி மாவட்டம்**
**பொதுமக்கள் குறை கேட்கும் கூட்டம் மற்றும்**
**நுகர்வோர் விழிப்புணர்வு முகாம் நடைபெற உள்ளது**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-**

*****

பொது விநியோகத் திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை களைவதற்கும், மக்களின் குறைகளை கேட்டு உடனுக்குடன் அவற்றை நிவர்த்தி செய்யவும், மாதந்தோறும் இரண்டாம் சனிக்கிழமை அன்று உணவுப்பொருள் வழங்கல் சம்பந்தமான பொதுமக்கள் குறை கேட்கும் கூட்டம் (Civil Supplies Grievances Meeting) மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வு முகாம் அனைத்து வட்டங்களிலும் நடத்தப்படவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:-

தேனி மாவட்டத்தில் **நவம்பர்- 2019-ஆம் மாதத்தில் 09.11.2019 அன்று** பொது விநியோகத்திட்ட மக்கள் குறைதீர் கூட்டம் தேனி வட்டத்திற்குட்பட்ட மாரியம்மன் கோவில்பட்டி கிராமத்தில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி எம்.சாந்தி அவர்கள், பெரியகுளம் வட்டத்திற்குட்பட்ட சோத்துப்பாறை கிராமத்தில் பெரியகுளம் சார் ஆட்சியர் செல்வி ச.சினேகா அவர்கள், ஆண்டிபட்டி வட்டத்திற்குட்பட்ட கன்னியப்பபிள்ளைபட்டி கிராமத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திருமதி.எம்.முருகசெல்வி அவர்கள், உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட திம்மிநாயக்கன்பட்டி கிராமத்தில் உத்தமபாளையம் சார் ஆட்சியர் டாக்டர் ஆர்.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள், போடிநாயக்கனூர் வட்டத்திற்குட்பட்ட பாலார்பட்டி கிராமத்தில் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் திருமதி இ.கார்த்திகேயினி அவர்கள் ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இக்குறை கேட்கும் கூட்டத்தில் பொதுமக்கள் பொது விநியோக கடைகள் சம்பந்தமான குறைபாடுகள் குறித்தும், குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கல், முகவரி மாற்றம் மற்றும் கடை மாற்றம் குறித்தும் மனு செய்யலாம். பொது மக்கள் தங்கள் குறைகளை முன்கூட்டியே சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலர், கூட்டுறவு சார்பதிவாளர் மற்றும் நியாய விலைக்கடை நடத்தும் நிறுவன அலுவலர்களுக்கு மனு மூலமும் தெரிவிக்கலாம்.

முன்கூட்டியே பெறப்படும் புகார்கள் மற்றும் குறைபாடுகள் வகைபாடு வாரியாக பிரிக்கப்பட்டு உடனுக்குடன் அவை தீர்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கூட்ட நாள் அன்று பொதுமக்களுக்கு நடவடிக்கை விவரம் தெரிவிக்கப்படும். மேலும் கூட்ட நாள் அன்று பெறப்படும் புகார்கள், குறைபாடுகள் மீது 30 தினங்களுக்குள் நடவடிக்கை மேற்கொண்டு பதில் தரப்படும்.

எனவே, பொதுமக்களும், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், நுகர்வோர் நடவடிக்கை குழுக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இம்முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**